# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 17/08/2017 | முதல் | 21/08/2017 |
| அறிக்கை எண் : | 065/ 2017 | வெளியீட்டு நாள் : | 16/08/2017 | | |

கடந்த கால வானிலை 11/08/2017 முதல் 15/08/2017 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 16.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33-36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 21-25 |
| மேக மூட்டம் | 6-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 50-93 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 3-20 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை** (21-08-2017 8.30 மணி வரை )

| காரணிகள் | 17-08-2017 | 18-08-2017 | 19-08-2017 | 20-08-2017 | 21-08-2017 |
|---|---|---|---|---|---|
| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் |
| மழை (மி.மீ) | 20 | 25 | 30 | 10 | 25 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 27 | 27 | 27 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 19 | 19 | 19 | 19 | 19 |
| மேக மூட்டம் | 8 | 8 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 50 | 50 | 50 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 10 | 10 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### குறுஞ்செய்தி

அடுத்த 5 நாட்களுக்கு ஆங்காங்கே மிதமான மழை பெய்ய வாய்ப்பு. வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும்.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

#### முக்கிய பயிர்கள் : தானியம்,பயறுவகை, எலுமிச்சை

தற்போது நிலவும் சூழ்நிலையில் சோளப்பயிர் சாகுபடியில் விதைநேர்த்தி செய்வது முக்கியமானதாகும். சோள விதைகளை விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பண்டாசிம் அல்லது கேப்டான் அல்லது திரம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.மேலும் நாற்றாங்காலில் விதைப்பதற்கு முன் 1 எக்டருக்கு 3 பொட்டலம் அசோஸ்பைரில்லம் (600 கிராம்) மற்றும் 3 பொட்டலம் பாஸ்போபேக்டீரியா (600 கிராம்) அல்லது 6 பொட்டலம் அசோபாஸ் (1200 கிராம்) கலந்து விதைநேர்த்தி செய்யவேண்டும்..

தற்போது நிலவும் சூழ்நிலையில் நிலக்கடலை சாகுபடியில் களைமேலாண்மை செய்வது முக்கியமானதாகும். நிலக்கடலை விதைப்புக்கு முன்னர் : ஃப்ளுகுளோரலின் எக்டருக்கு 2.0லி மண்ணில் அளிக்கவேண்டும்.பின் தொடர்ந்து அளவான பாசனம் செய்யவேண்டும். நிலக்கடலை வயல்களில் களை முளைப்பதற்கு முன் விதைத்த 3-ம் நாள் 1 எக்டருக்கு 2.0லிட்டர் ஃப்ளுகுளோரலின் அல்லது 3.3 லிட்டர் பெண்டிமெத்தலின் இவற்றுள் ஏதேனும் ஒன்றை தட்டை விசிறி நுன்குழாய் மூலம் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து பின் தொடர்ந்து பாசனம் செய்யவேண்டும்.

தற்போது நிலவும் பருவநிலையில் எலுமிச்சை பயிரைத் தாக்கும் சொறி நோய் பரவலாக தென்படுகின்றது. சொறி நோயினை ஏற்படுத்தும் பாக்டீரியா இலைத்துளைகள் மூலமாகவோ பூச்சி மற்றும் காற்றில் அசையும் முட்களினால் ஏற்படும் காயங்கள் மூலமாக தாவரத்திற்குள் நுழைகிறது. மழைத்துளிகள், காற்று, இலைத் துளைக்கும் பூச்சிகள் முதலியன மூலமாகவும் பரவுகிறது.இதனைக்கட்டுப்படுத்த பழத்தோட்டங்களில் நோயுற்ற மரங்களில் நோயுற்ற சிறுக் குச்சிகளை வெட்டிய பின்பு 1 சதப் போர்டோக் கலவையை அல்லது 0.25% தாமிர ஆக்சிக் குளோரைடு மருந்தை தெளிக்க வேண்டும். இச்சொறி நோயைக் கட்டுப்படுத்த 500 மில்லி கிராம் முதல் 1 கிராம் வரை ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்டை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து 15 நாட்களுக்குக்கொரு முறை தெளிக்க வேண்டும்.

தற்போது நிலவும் பருநிலையில் ஆடுகளை தாக்கும் துள்ளுமாரி நோய் பரவலாக தென்படுகின்றது. எல்லா வயது ஆடுகளையும் பாதிக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும்.இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி விழும். இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரிய உதயத்திற்குப் பின் ஆடுகளை 1 மணி நேரம் கழித்து மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டும்.பருவமழைக்கு முன் தடுப்பூசி போடுதல் அவசியம்.